**மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச்சட்டம் மீதான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தினை திருத்துவதற்கு அரசாங்கம் பின்பற்றிய அவசரமான மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற செயன்முறை குறித்து மிகுந்த வருத்தமடைகின்றது. இத்திருத்தச் சட்டமானது 2017 செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்திலுள்ள மூன்றில் இரண்டிற்கு மேற்பட்ட பெரும்பான்மை உறுப்பினர்களினால் நிறைவேற்றப்பட்டது. இத்திருத்தச்சட்ட மூலமானது குழு நிலை விவாதங்களின் போது குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டமையினால் இச்சட்டமானது 2017 ஜீலை 10 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலத்திலிருந்தும், 2017 ஜீலை 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முற்போடப்பட்ட சட்டமூலத்திலிருந்தும், உச்ச நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்ட சட்டமூலத்திலிருந்தும் கணிசமான முறையில் வேறுபட்டதாக உள்ளது. ஆரம்பத்தில் இச்சட்டமூலத்திலே மாகாண சபைத் தேர்தல்களுக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு நியமனப் பத்திரத்திலும் பெயர் காணப்படுகின்ற மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் முப்பது சதவீதத்திற்குக் குறையாமல் பெண் வேட்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் பொதுக் களங்களில் கிடைக்கக்கூடியத் தகவல்களை வைத்துப் பார்க்கின்ற போது, (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இன்னமும் முடிவான இறுதிச் சட்டத்தினை பார்க்கவில்லை) நிறைவேற்றப்பட்டுள்ளச் சட்டமானது மாகாண சபைத் தேர்தல்களின் தேர்தல் முறைமையினை மாற்றுவதுடன் அனைத்து மாகாண சபைகளிலும் பெண்களுக்கு 25 % ஒதுக்கீட்டினை வழங்குகின்றது.

ஆரம்பத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது தேர்தல் முறைமையினை கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமைக்கு மாற்றுதல் மற்றும் மாகாண சபைகளில் பெண்களுக்கான ஒதுக்கீட்டினை அறிமுகப்படுத்துதல் ஆகிய இரண்டினையும் வரவேற்கத்தக்க மாற்றங்களாக அவதானித்தது. எவ்வாறெனினும் இம் மாற்றங்கள் கொண்டுவரப்பட்ட அவசரமான முறைமையானது பிரதிநிதித்துவ ஜனநாயகக் கொள்கைக்கு முரணானதொன்றாகும். சட்டமூலங்களுக்குப் பின்னுள்ள கொள்கைகளை முற்றிலுமாக மாற்றக் கூடியதான திருத்தங்கள் பொது மக்கள் விவாதத்திற்காக அல்லது மீளாய்விற்காக பகிரங்கப்படுத்தப்படுவதில்லை என்பதுடன் இத் திருத்தங்கள் குறிப்பிட்ட துறைசார் மேற்பார்வைக் குழுவின் கலந்துரையாடலுக்கேனும் உட்படுத்தப்படுவதில்லை. இந் நடபடிமுறையானது, சிக்கல் மிகு அரசியல் சமரசங்கள் மற்றும் சட்ட மொழிக்கு மாற்றப்பட வேண்டிய கணித சூத்திரங்கள் என்பனவற்றினைத் தேவைப்படுத்துகின்ற தேர்தல்கள் சீர்திருத்தம் போன்றதான சிக்கலான விடயங்களின் போது பிரச்சினைக்குரியதாக அமையும். வரையப்படுகின்ற சட்டவாக்கங்களானவை செயற்படுதன்மையற்றதாக இராது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான விசேட கவனம் எடுக்கப்படுதல் வேண்டும். அரசாங்கம் மேற்கொண்ட செயன்முறைகள் விதிமுறைப்படி சட்டரீதியானது எனினும், மேற்கொள்ளப்பட்ட இச்செயன்முறையானது ஒரு தகாத முன்மாதிரியினை உருவாக்கியுள்ளதுடன் வெளிப்படைத்தன்மை குறித்த அரசாங்கத்தின் உடன்பாட்டினையும், புதிய துறைசார் குழுக்கள் மீளாய்வு மற்றும் பொறுப்புடைமை தொடர்பான தமது வகிபங்கினை அர்த்தமுள்ள ரீதியில் மேற்கொள்வதனையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

இலங்கை அரசியலமைப்பானது பாராளுமன்றத்தின் சட்டமூலங்கள் ஆக்கப்படுவதற்கு முன்னரான மீளாய்விற்கு, அச்சட்டமூலம் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடப்பட்டு ஏழு நாட்களுக்குள்ளான காலப்பகுதி என்ற ஒரு மட்டுப்படுத்தப்பட்ட கால அளவினையே அனுமதிக்கின்றது. இச்செயன்முறையினை ஏற்றுக்கொள்வதன் மூலமாக அரசாங்கமானது முன்மொழியப்பட்ட திருத்தங்களை உச்ச நீதிமன்றத்தின் ஊடாக பரிசீலனை செய்கின்ற இலங்கைப் பிரஜைகளின் உரிமையினை பறிக்கின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் ஏனைய பல தரப்புக்களால் வருத்தம் தெரிவிக்கப்பட்ட, சட்டவாக்கச் செயன்முறைகளில் காணப்படுகின்ற நிறைவேற்றதிகார செல்வாக்கு மற்றும் வெளிப்பாட்டுத் தன்மையற்றநிலை ஆகிய விடயங்களை அரசாங்கமானது மீள வலியுறுத்தியுள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது சட்டவாக்கங்கள் அவசரமான முறையில் நிறைவேற்றப்பட கூடாது மற்றும் சட்டவாக்கச் செயன்முறைகளில் பாராளுமன்றத்தின் அரசியலமைப்புசார் வகிபங்கு மற்றும்

பிரஜைகளின் அரசியலமைப்புசார் உரிமைகள் என்பன மதிக்கப்பட வேண்டும் என்பதனை மீண்டும் எடுத்துரைக்கின்றது.

இச்சட்டத்தின் விளைவாக மாகாண சபை தேர்தல்கள் குறைந்தது ஆறு மாத காலப்பகுதிக்கேனும் பிற்போடப்படும். ஏனெனில் புதிய தேர்தல் முறைமையானது, சிக்கலானதும் அதேவேளை அடிக்கடி முரண்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றதுமான ஒரு செயன்முறையான தொகுதிகளின் எல்லைகளினை அடையாளப்படுத்துவதனைத் தேவைப்படுத்துகின்றது. இக்காலப்பகுதியிலே ஐந்து வருட காலப்பகுதியுடன் செல்லுபடியற்றதாகின்ற மாகாண சபைகளின் அதிகாரங்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 154L மற்றும் 154M இற்கு அமைவாக ஜனாதிபதி மற்றும் / அல்லது பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படும். இது உண்மையாகவே அதிகாரப்பகிர்வு தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை மற்றும் நடைமுறையில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் அதற்கு எதிரானதாகவும் அமைகின்றது. மேலும் ஜனநாயகரீதியில் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களான மாகாண சபையில் ஏற்படக்கூடிய இவ் இடைவெளியானது ஆறு மாதத்திற்கு மேலாகவும் தொடரலாம் என்பதுடன் அனைத்து மாகாண சபைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். மேலும் எந்தவொரு அரசாங்கமும் எதிர்காலத்தில் மாகாண சபை முறைமையினை முடக்குவதற்கான ஒரு முன்மாதிரியாக இவ்விடயத்தினைப் பயன்படுத்தலாம். இச் சந்தர்ப்பத்திலே இருபதாவது திருத்தச் சட்டமூலம் (தற்போது கைவிடப்பட்டுள்ளது) மற்றும் இந்தச்சட்டம் ஆகியன அதிகாரப்பகிர்வின் மீது ஏற்படுத்திய கணிசமான தாக்குதல் தொடர்பான சிறிய கவனத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இச் சட்டத்திற்கு ஆதரவு நல்கியிருப்பது ஏமாற்றமளிப்பதாய் அமைந்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இவ் வன்மையான நடபடிமுறையானது உச்ச நீதிமன்றமானது அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலத்தினை ஆக்குவதற்கு மக்கள் வாக்கெடுப்பு அவசியம் எனத் தீர்மானித்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருப்பதனை அவதானிக்கின்றது. இது அரசாங்கம் இச்சட்டத்தினை தேர்தல்களை பிற்போடுவதற்காகவே நிறைவேற்றியுள்ளது என்ற கருத்தினைத் தோற்றுவிக்கின்றது. மாகாண சபைகளானவை அரசியலமைப்பினால் ஸ்தாபிக்கப்பட்டவை என்பதுடன் அவை ஜனநாயகரீதியில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள். ஆகவே அத்தகைய அதிகாரப்பகிர்வளிக்கப்பட்ட நிறுவனங்கள் மீது அரசாங்கம் விசித்திரமான காரணங்களுக்காக அல்லது தம்முடைய மூலோபாயத் தவறுகளை வெல்வதற்காக தலையிடுவது நெறிமுறையானதல்ல. தேர்தல்களைப் பிற்போடுதல் என்பது மக்கள் இறைமையின் ஒரு தீவிரமான மீறலாகும் என்பதுடன் அத்தகைய பிற்போடுதல்கள் மிகவும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரமே இடம்பெறுதல் வேண்டும். அரசாங்கமானது அத்தகைய விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் எதனையும் வெளிப்படுத்தவில்லை. உள்ளூராட்சி அதிகாரத் தேர்தல்களுக்கான தினம் தொடர்பில் அரசாங்கத்தின் தலைவர்களால் அளிக்கப்பட்ட பல்வேறு நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது, அரசாங்கம் வாக்குறுதி அளித்தமைக்கு ஏற்ப மாகாண சபைத் தேர்தல்கள் ஆறுமாத காலப்பகுதிக்குள் இடம்பெறும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. மேலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கமைய தேர்தல்கள் சரியான நேரத்தில் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும்படி கோரி அரசாங்கத்திற்கு அழுத்தம் தெரிவிக்குமாறு பாராளுமன்றத்திலுள்ள பிரதான எதிர்க்கட்சியொன்றான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைக் கேட்டுக் கொள்கின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அரசாங்கமானது அதன் வாக்குறுதிகளை மதிக்க வேண்டும் எனவும் உள்ளூராட்சித் தேர்தல்களை 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னரும் மாகாண சபைத் தேர்தல்களை 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னரும் நடாத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோருகின்றது. மேலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அரசாங்கமானது சட்டவாக்கச் செயன்முறைகளில் ஈடுபடுகின்ற போது குறிப்பாக அரசியலமைப்புசார் விடயங்கள் தொடர்பாக சட்டமாக்குகின்ற போது மக்களுடைய உரிமைகள் அதேபோல பாராளுமன்றத்தின் வகிபங்கு ஆகியவற்றிற்கு மதிப்பளிக்கும் வகையில் வெளிப்படைத்தன்மையினை பேண வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகின்றது.